**OS.NO:131/2024**

**DW : 2** அருண்பிரபு த/பெ.அருணாச்சலம்

நாள் : 23.09.2025

**சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை</u>:**

நான் தற்போது பனப்பாக்கம் கனரா வங்கியில் மேளாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி சுப்பரமணி எங்கள் வங்கியில் கடன் வாங்கியிருந்தார். அது நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கடனுக்காக அவர் பெயரில் உள்ள பத்திரங்களை வங்கியின் பெயருக்கு அடமானம் எழுதிக்கொடுத்திருந்தார். அந்த கடன் வைப்பு பத்திரத்தினுடைய அசலை நீதிமன்றத்தில் சமர்பிக்கபட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சுப்பிரமணி பெயரில் உள்ள அசல் செட்டில்மென்ட் பத்திரம் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அடமான பத்திரத்தின் படி மேற்படி சுப்பிரமணி எங்கள் வங்கியிடம் சமர்ப்பித்த அசல் உயில் ஆவணம் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த உயில் எழுதிக்கொடுத்த முனியம்மாளினுடைய இறப்பு சான்றிதழின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் அது **பி.வா.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முனியம்மாளின் பெயரில் வரக்கூடிய கிரைய பத்திரத்தின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடனை சுப்பிரமணிக்கு வழங்க எங்கள் வங்கியால் பெறப்பட்ட சட்ட கருத்துரை அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சுப்பரமணி அவர்கள் பெயரில் கொடுக்கப்பட்ட வரி ரசீதின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வாசா.21ல் இணைக்கப்பட்டுள்ள அ பதிவேடு, பட்டா நகல், அடங்கல், பசலி 1428ற்கு உண்டானது ஆகியவைகள் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை 2–ம் பிரதிவாதி சரவணன் எங்கள் வங்கியில் அடமானம் வைத்து எங்கள் வங்கியில் கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் சரிதான். முனியம்மாள் அவருக்கு சொந்தமான சொத்துக்களை அவரது கணவர் தண்டபாணி பெயருக்கு உயில் ஆவணம் 24.11.1975 அன்று எழுதிக்கொடுத்த அந்த உயில் ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் உள்ள 3ம் பிரதிவாதி சரவணன் அவருக்கு சொந்தமான சொதத்க்களை எங்கள் வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி சரவணன் அவரது சகோதரர் 2ம் பிரதிவாதி சுப்பரமணி அவர்கள் சமர்பித்த அசல் ஆவணத்தின் நகல்களை வைத்தும் அவர் பெயரில் அவரது தந்தையார் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் அசல் ஆவணத்தை வைத்தும் தனிப்பட்ட முறையில் கடன் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முனியம்மாள் அவர்கள் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி தண்டபாணி அவர்கள் பெயரில் 24.02.1970 அன்று கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் 1–ம் பிரதிவாதி

கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.31** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சரவணனுக்கு கொடுக்கப்பட்ட கடனுக்காகவும் எங்கள் வங்கியில் சட்ட கருத்துரை பெற்று தான் கடன் வழங்கியுள்ளோம் அந்த சட்ட கருத்துரையின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த கடனுக்காக சரவணன் எழுதிக்கொடுத்த கடமான கடன் பத்திரத்தின் அசல் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நகலுடன் சரிபார்க்கப்பட்டு அது **பி.வா.சா.ஆ.33** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த கடன்கள் இன்று தேதியில் நிலுவையில் உள்ளது. நான் நீதிமன்றம் கோரும் போது 24.11.1975 தேதியிட்ட அசல் உயில் ஆவணத்தை கேட்கும் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றம் மூலமாக வழக்காணை அனுப்பப்பட்டது. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியும். வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கெதிராக வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. என்னால் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 24.11.1975 தேதியிட்ட உயில் ஆவணம் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது சட்ட கருத்துரை அடிப்படையில் தான் நாங்கள் பிரதிவாதிகளுக்கு கடனை வழங்கினோம். 2ம் பிரதிவாதி சுப்பிரமணிக்கு எங்கள் வங்கியால் 20.12.2018 அன்று கடன் வழங்கப்பட்டது. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் மேற்படி கடன் 2ம் பிரதிவாதிக்கு வழங்கினோம் என்று சொன்னால் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் பற்றி எங்களுக்கு தெரியாது. இந்த

வழக்கானது 2017 ம் ஆண்டிலேயே சுப்பரமணி மற்றும் சரவணனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் பற்றி எங்களுக்கு தெரிந்திருந்தால் மேற்படி கடனை வழங்கியிருக்கமாட்டோம் என்று சொன்னால் அது குறித்து நான் பதில் எதுவும் கூற முடியாது. 2ம் பிரதிவாதி சுப்பரமணிக்கு ரூபாய்.7 இலட்சம் 20.12.2018 அன்று கடன் கொடுத்தோம். 3ம் பிரதிவாதி சரவணன் எங்கள் வங்கியில் ரூபாய்.8 இலட்சம் 22.12.2017 அன்று கடன் வாங்கியுள்ளார். சுப்பரமணி கடன் பெறுவதற்காக என்னென்ன சொத்து பத்திரங்களை அடமானம் வைத்துள்ளார் என்றால் பிவாசாஆ.21ல் அடமான கடன் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நிலங்களை அடமானம் வைத்து கடன் வழங்கப்பட்டது. பிவாசா.27 வரி இரசீது 07.03.2018 அன்று வழங்கப்பட்டது. மேற்படி இருவரும் வாங்கிய கடனை திருப்பி செலுத்தி நிலுவையில் உள்ளதா அல்லது செலுத்தாமலேயே நிலுவையில் உள்ளதா என்றால் பணத்தை திருப்பி செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் கடனை புதுப்பித்து வருகிறார்கள். இந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு இன்றைய தேதயில் தெரிய வந்ததால் இனி வரும் காலங்களில் பிரதிவாதி பெற்ற கடனை நாங்கள் புதுப்பித்தால் அதற்கு வாதிகள் பொறுப்பாக மாட்டார்கள் வங்கி தான் பொறுப்பு என்று சொன்னால் சட்ட கருத்துரையை பெற்று நாங்கள் அதன் படி முடிவு செய்வோம்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 13:06:38 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.